

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கழகத்தின் சென்னை – விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட BLA2 – BLC சந்திப்பு மாநாடு வருகின்ற பிப்ரவரி 11–ஆம் தேதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாமல்லபுரம் அடுத்த வடநெம்மேலியில் நடைபெற உள்ளதை முன்னிட்டு, சென்னை மண்டலப் பொறுப்பாளரும், கழக துணைப் பொதுச்செயலாளருமான ஆ.இராசா – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் – விழுப்புரம் மண்டலப் பொறுப்பாளரும் அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோருடன் இணைந்து அப்பகுதியை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.




பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் (30.01.2026) சென்னை, அசோக் நகர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் அரசுப் பள்ளித் தூதுவர் திட்டத்தினை தொடங்கி வைத்து, விழுதுகள் செயலியினை வெளியிட்டார்.

### சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின்

# தூய்மைஇயக்கத்திட்டப்பணிகள்குறித்தஆய்வு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை,ஜன.31-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (30.1.2026) தலைமைச் செயலகத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் தூய்மை இயக்கத் திட்ட ப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் தூய்மையாக்க வேண்டும். குப்பை மேலாண்மை சரியாக மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக, தூய்மை இயக்கம் திட்டம் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தூய்மை இயக்கம் சார்பில் முதற்கட்டமாக, சென்னை தலைமைச் செயலகம் உள்பட மாநிலம் முழுவதும் அரசு அலுவலகங்களை சுத்தம் செய்யும் வகையில் பிளாஸ்டிக் கழிவுகள், மின்னணு கழிவுகள், உலோகக் கழிவுகள், காகித கழிவுகள், கண்ணாடி கழிவுகள், பயன்படுத்த இயலாத மரத் தளவாடங்கள் போன்ற பல்வேறு வகையான கழிவுகளை சேகரிக்கும் மாபெரும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடந்த 12.1.2026 முதல் 25.1.2026 வரை நடைபெற்ற "குப்பைத் திருவிழா"வின் மூலமாக தமிழ்நாடு முழுவதும் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. குப்பைத் திருவிழாவில் 13,400 க்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள், 14,160 கழிவு ஒருங்கிணைப்பாளர்கள், 1.25 லட்சம் சுய உதவிக்குழுப் பெண்கள் பங்களிப்பின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 1,411 டன் பிரிக்கப்பட்ட உலர் கழிவுகள் பெறப்பட்டு நிலத்திற்கு செல்லாமல் தடுக்கப்பட்டது.

இதற்கு முன் 90,000 திற்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்களில் நடைபெற்ற கழிவு சேகரிப்பு இயக்கம் மூலமாக பெறப்பட்ட கழிவுகள் மற்றும் இக்குப்பைத் விழாவில் பெறப்பட்ட கழிவுகள் மூலமாக ரூபாய் 4 கோடியே 30 லட்சத்திற்கும் மேல் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் அனைவரும் கழிவுகளைப் பிரித்து வழங்கி ஒன்றிணைந்து தூய்மையான தமிழ்நாட்டிற்கு தங்கள் பங்களிப்பை ஆற்றிட விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், ஒவ்வொரு மாதமும் குப்பைத் திருவிழா நடைபெற உள்ளது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பா.பொன்னையா, நகராட்சி நிர்வாக இயக்குநர் ப. மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி. ஷஜீவனா, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### மா.பா.அன்புதுரை தலைமை! நே.சிற்றரசு முன்னிலை! அன்பகம் கலை–டாக்டர் நா. எழிலன் – சைதை சாதிக்–எம்.கே.வினோத் வேலாயுதம் – நுங்கை வி.எஸ்.ராஜ் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு கிழக்கில் - 'தமிழ்நாடு தலை குனியாது' மாபெரும் பொதுக்கூட்டம்!

## எம்.எம்.அப்துல்லா– தயாநிதி மாறன் எம்.பி. சிறப்புரையாற்றுகின்றனர்!

சென்னை, ஜன.31.

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு தலை குனியாது மாபெரும் பொதுக்கூட்டம் 2.2.2026-திங்கட்கிழமை அன்று மாலை 5 மணிக்கு, நுங்கம்பாக்கம், வடக்கு மாடவீதி எப். 3, காவல் நிலையம் அருகில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு முன்னிலை வகிக்கிறார். எம்.ஆர்.ஜம்புலிங்கம்,கோ.ரவி, மு.வெங்கடேசன், டி.வைலட்மேரி, எம். ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக் கூட்டத்தில் கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர்எழிலன் நாகநாதன்எம்.எல்.ஏ., சைதை சாதிக், எம்.கே.வினோத் வேலாயுதம், நுங்கை வி.எஸ்.ராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக் கூட்டத்தில் வழக்கறிஞர் கே.ஜெ.சரவணன், அழகிரி சதாசிவம், எஸ்.எம்.கே. அண்ணாதுரை, து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலைச்செல்வன்,ஆ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டீன்பாபு, எம்.டி.ஆர்.நாதன்,ஜெ. நற்குணநாதன்,டி.ஜோஸ்டேனியல்,பா.இராபர்ட், வெற்றிச் செல்விமாணிக்கம்,ஆர்.பாபு, எப்.பீட்டர்ஜான், எஸ். சத்தியபெருமாள்,தேனா எல். தவமணி,கோ.யுவராஜ், எஸ். என்.கே.ராமன், க.சிட்டிபாபு,ச. டேவிட்இன்பராஜ்,கே.எஸ். தினேஷ் பிரபு,த.குணசேகர், வரதை த.பரி,மு.மோகன், புவி. பாலாஜி, என்.பி.இதயத்பாட்ஷா, ஸ்டெல்லிங் மோகன்,ர.பொன்னம்மாள், பா.கமலக்கண்ணன், வழக்கறிஞர் பா.பிரகாஷ்,துபாய் வி.ஆர்.விஜய்,திருமலை பொன்ரங்கம்,டி.கே.லதாபிளாரன்ஸ், மு.சீனிவாசன், மு.செந்தில்குமார்,எம்.டி.ஆர்.சாரதிமணிமாறன்,டி.எஸ்.ராஜா, மெய்.சண்முகம், ஜி.வி.சரவணன், எம்.ஏ.நந்தினி, எம்.சி.மல்லிகாயுவராஜ், எலிசபெத் அகஸ்டின்பாபு, ஜெ. எம்.எச்.இம்ராம்,என்.மோகனவேல், குட்டி என்கிற சுப்பிரமணி,ப.பாலசந்தர்,வி. தினேஷ்குமார்,கே.கமலக்கண்ணன், கே.ரகுராம், ஜெ.பி.ரவிவர்மன், சி.ஜான்சில்வா, ஏ.வி. ராமநாதன்,ஜெ. வரதராஜன், ஏ.கண்ணன்,கே.வேல் முருகன்,சி.பாபு என்கிற பாட்ஷா, ஜெ.சிவங்கம், கே.பி. வினோத்,எஸ்.குணசேகர், அ.குப்பன், எம்.டி.ஆர்.புகழ், டி. ஐசண்ட், பா.சுரேஷ்குமார், எஸ். பார்த்திபன்,வி.என்.பாபு,ஏ.சரவணன், ஆர்.சீனிவாசன், கோ. தட்சிணாமூர்த்தி, ஜெ.ஏ.புவனேஷ், ஸ்ரீவத்ஸன், வி.தனசேகர், எஸ்.ஆனந்தி, இ.சத்யா,சி.முர்த்தி, எஸ்.பிரேம்குமார்,ஜி.மாணிக்கம்,பி.நரேந்திரன், பி.சுரேஷ்,ரகு. தட்சணாமூர்த்தி,டி.துரைராஜ், எஙஸ. பிரதீப், தரணி குமார், எம்.செல்வம், டி.கே.ரமேஷ், கே.தட்சணாமூர்த்தி,டி.அரி, சு.மோ. ஸ்ரீராம்,வி.ஜெகதீஷ், சி.எஸ். ஆர்.சந்தோஷ்,பி.கோபிகிருஷ்ணன், எஸ்.செந்தில்,வி.வேல்குமார்,வெ.அஸ்வின்குமார்,ஆர். சேஷாத்திரி என்கிற பாலா, பி. ராம்குமார், ஜெயந்தி பக்கிரிசாமி,உமாதேவி, முகவை நடராசன்,பி.அரிகிருஷ்ணன்,செ.ஜான்சன்ராஜ், ஆர்.அருண்குமார், கே.வெங்கடேசன்,ஆர்.கிருஷ்ணகுமார், கு.லாரன்ஸ், இ.இராஜதுரை, க.மோ.ஸ்ரீராம்,டி.ரவிகுமார், எஸ்.அண்ணாதுரை, ஆர். பால்சுதாகர்,சி.கே.ரஞ்சித்,ஆர். கோபி, எம்.பத்மநாபன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

113 வது வட்டச் செயலாளர் நுங்கை ப.மகேஷ்,113(அ) வட்டச் செயலாளர் த.தேவராஜ்,113 (ஆ) வட்டச் செயலாளர் எம்.என். விஷ்ணு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

# சென்னை மண்டல மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, ஜன.31-

திராவிட முன்னேற்ற கழக சென்னை மண்டல மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மற்றும் வலைதள அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் 02.02.2026 - திங்கள் கிழமை மாலை 3.00 மணியளவில் சென்னை மேற்கு மாவட்ட அலுவலகம் அமைந்துள்ள எண்.20/32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034ல் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தை மாநில மகளிரணி செயலாளர் திருமதி. ஹெலன் டேவிட்சன் தலைமையேற்று நடத்துவார். திருமதி. நாமக்கல் ராணி, (தொண்டரணி செயலாளர்), சேலம் சுஜாதா, (பிரச்சாரகுழு செயலாளர்), திருவள்ளூர் மாவட்ட பொறுப்பாளர், ராணி ரவிச்சந்திரன் பிரச்சார குழு செயலாளர், டாக்டர். யாழினி, வலைதள பொறுப்பாளர், சென்னை மற்றும் காஞ்சி பொறுப்பாளர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட சென்னை வடக்கு, கிழக்கு, வடகிழக்கு, மேற்கு, தெற்கு, தென்மேற்கு, சென்னை, திருவள்ளூர் கிழக்கு, மத்திய மாவட்ட மற்றும் காஞ்சி வடக்கு, காஞ்சி தெற்கு மகளிர் அணி நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: தேர்தல் பணி குறித்து ஆலோசிக்கப்படுகிறது என்று மகளிரணி இணைச் செயலாளர் மற்றும் சென்னை மண்டல குழுத் தலைவர் குமரி விஜயகுமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில், தமிழ்நாடு தேயிலைத் தோட்ட கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள டேன் டீ உணவகத்தினை மேயர் ஆர்.பிரியா நேற்று (30.01.2026) திறந்து வைத்தார். இந்நிகழ்வில் ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், டேன் டீ மேலாண் இயக்குநர் அருண்லால், பொது மேலாளர் தருண்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### மற்ற மாநிலங்கள் பின்பற்றக் கூடிய வகையில் உள்ளது

# திராவிட மாடல் அரசின் தொழில்துறை வளர்ச்சி!

## ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டி அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பெருமிதம்!

சென்னை,ஜன.31-

இந்தியாவின் பிற மாநிலங்கள் பின்பற்ற வேண்டிய முன்மாதிரியான தொழில்துறை வளர்ச்சியை திராவிட மாடல் தமிழ்நாடு அடைந்துள்ளது! ஒன்றிய அரசின் 2025-26 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டி அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



இந்தியாவிலேயே உற்பத்தித் துறை வேலைவாய்ப்புகளில் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழ்நாடு, நாட்டின் மொத்த உற்பத்தித் துறை பணியாளர்களில் 15% பங்கைக் கொண்டுள்ளது என்பதை ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வு அறிக்கை எடுத்துக்காட்டி உள்ளது. இது நமது தொழில் துறையின் ஆழமான கட்டமைப்பையும், வலுவான விநியோகஸ்தர் வலைப்பின்னல்களையும் மற்றும் முதலீடுகளை உண்மையான, உயர்தர வேலைவாய்ப்புகளாக மாற்றும் திறனையும் பிரதிபலிக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திறன்மிக்க ஆட்சியில் வெறும் தொழிற்சாலைகளை மட்டும் உருவாக்காமல், ஒட்டுமொத்த சூழலமைப்புகளை உருவாக்கும் ஒரு தொழில்முனைவோர் மாநிலமாகவும் தமிழ்நாடு உருவாகி இருப்பதை இந்த ஆய்வு அங்கீகரிக்கிறது. வளர்ச்சியின் அளவு மீள்தன்மை மற்றும் போட்டித்தன்மைக்கான தொகுப்புகளாக ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வாகன உதிரிபாகத் தளம் மற்றும் மின்னணுவியல் மண்டலம் போன்றவை தேசிய அளவிலான எடுத்துக்காட்டாக திகழ்கின்றன.

தொழில்துறைக்கு ஏற்ற

சீர்திருத்தங்களை திராவிட மாடல் அரசு மேற்கொண்டதன் மூலம், அதிவேக ஒற்றைச் சாளர அனுமதிகள், டிஜிட்டல் மயமாக்கப்பட்ட ஒப்புதல்கள், வலுவான சுற்றுச்சூழல் இணக்கத்துடன் கூடிய வேகமான திட்டச் செயலாக்கம் மற்றும் தாராளமயமாக்கப்பட்ட கட்டுமான விதிகள் மூலம் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. இதன் மூலம் தடைகள் குறைக்கப்பட்டு, தொழில் துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சி விரைவுபடுத்தப்படுகிறது.

தூத்துக்குடி துறைமுகம் இந்தியாவின் பசுமை ஹைட்ரஜன் மையங்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஓரகடம் மருத்துவக் கருவிகள் பூங்கா, வளர்ந்து வரும் துறையில் மேம்பட்ட உற்பத்தியை வலுப்படுத்துவதற்காக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ், மாநிலத்தின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய பரவலாக்கப்பட்ட வளர்ச்சிக்கான திராவிட மாடல் அரசின் செயல்பாடுகளால் தொழில்துறையில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதையும், இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு தமிழ்நாடு முன்னோடியாக திகழ்வதையும் ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வு அறிக்கையும் உறுதி செய்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### நகர்ப்புற வீட்டுவசதி தட்டுப்பாட்டை தீர்க்க

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஜன.31-

விரைவாக நகரமயமாகும் நகரங்கள் மற்றும் அதிக மக்கள் தொகை உள்ள பகுதிகளில் வீட்டுப் பற்றாக்குறையை சரி செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என்று தயாநி திமாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறைக்கு நாடாளுமன்றக் குழு துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதிமாறன் எம்.பி. சில கேள்விகளை எழுப்பியுள்ளார்.



அதன் விவரங்கள் வருமாறு:

ஒன்றிய அரசின் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புறம் (PMAYU), மலிவு வாடகை வீட்டு வளாகங்கள் (ARHC) மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி ஆகிய திட்டங்களின் கீழ், நகர்ப்புற வீட்டுப் பற்றாக்குறை குறித்த கடந்த மூன்று ஆண்டு தரவுகளை ஒன்றிய அரசு, ஒவ்வொரு ஆண்டும் தொகுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்களை மாநில வாரியாகத் தெரிவிக்கவும்.

விரைவாக நகரமயமாகும் நகரங்கள் மற்றும் அதிக மக்கள் தொகை உள்ள பகுதிகளில் வீட்டுப் பற்றாக்குறையை சரி செய்ய, தமிழ்நாடு அரசு சமர்ப்பித்த முன்மொழிவுகளின் நிலை என்ன?

PMAYU அல்லது ARHC திட்டங்களின் கீழ், தமிழ்நாட்டிலிருந்து ஏதேனும் குறைந்த விலை வீடுகள், வாடகை வீடுகள் திட்டங்கள் அல்லது நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? அல்லது பரிசீலனையில் உள்ளனவா?


அப்படியானால், அதில் அங்கீகரிக்கப்பட்ட அலகுகள் (UNITS), ஒன்றிய அரசின் பங்கு விடுவிக்கப்பட்ட தொகை, நிலுவையில் உள்ள தொகை (ஏதேனும் இருந்தால்), முடிக்கும் கால அவகாசம் மற்றும் தரப்பட்ட அங்கீகாரம், நிதி விடுவிப்பில் தாமதம் ஏற்பட்ட காரணங்கள் உள்ளிட்ட விவரங்களைத் தெரிவிக்கவும்.

---

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அணிகளின்

# மாவட்ட அமைப்பாளர்கள்- துணை அமைப்பாளர்கள் - 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம், நாளை 1.2.2026 ஞாயிற்றுகிழமை மாலை 3.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் ஜோதி திரையங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் எனது (தா.மோ. அன்பரசன்] தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :-

1. பிப்ரவரி 3:- பேரறிஞர் அண்ணா நினைவு நாள்
2. பிப்ரவரி 11- அன்று மாலை நமது மாவட்டத்தில் உள்ள திருவிடந்தை கலைஞர் திடலில் நடைபெறவுள்ள BLA -2. BLC, BDA, BYO மண்டல சந்திப்பு மாநாட்டில் பங்கேற்பது குறித்து.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், ஆர்.எம்.ஜெயின் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெற்ற மனித நேய வார நிறைவு விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு மனித நேய வார விழா முன்னிட்டு 13 மாவட்ட அரசு (ஆதிந) மேல்நிலைப்பள்ளிகளில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கேடயங்களை வழங்கினார். உடன்மாவட்டஆட்சித்தலைவர்மு. பிரதாப்சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், டி.ஜே.கோவிந்தராஜ், நகர்மன்ற தலைவர் ப.உதயமலர் பாண்டியன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சொ.கற்பகம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ப.செந்தில்குமார், ஆசிரியர்கள், திரளான மாணவிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.